



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் – சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மா. சுப்பிரமணியன் முன்னிலையில் விருகம்பாக்கத்தில் உள்ள ஏ.எல்.ஏ திருமண மண்டபத்தில் நேற்று (9.6. 2025) கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், பகுதிச் செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா, வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன், மாவட்டக் கழக நிர்வாகிகள் பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன் , மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கனிமொழி தனசேகரன், நிஷா உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

# “கல்வி வளர்ச்சிக்கு முத்தான மூன்று திட்டங்கள்”

## சேப்பாக்கம் திருவல்லிக்கேணியில் மாணவர் வாசகர் சந்திப்பு!



சென்னை, ஜூன் 10 - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ‘கலைஞர் நூலகம்’ அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 100 கலைஞர் நூலகங்கள் திறக்கப்பட்டு, பள்ளிக் குழந்தைகள் முதல் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் வரை பலருக்கும் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகின்றன.

இதில் சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 6.6.2025 அன்று 120(அ) வது - வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் முனைவர் ஜெ.பாலச்சந்தர் கலந்துகொண்டு, தமிழ்நாடு கல்வியில் அடைந்துள்ள வளர்ச்சி குறித்தும், அந்த வளர்ச்சிக்கு அடித்தளமாக நமது திராவிட மாடல் அரசு கொண்டுவந்த திட்டங்கள் குறித்தும் பேசினார். “பெண் பிள்ளைகளுக்கு ‘புதுமைப் பெண்’ திட்டம், ஆண் பிள்ளைகளுக்கு ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம், அனைத்து மாணவர்களுக்கும் ‘நான் முதல்வன்’ திட்டம் என, கல்வி வளர்ச்சிக்காக திராவிட மாடல் முதலமைச்சர் முத்தான 3 திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். இதன் விளைவாக, தமிழ்நாட்டின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் 51.3%-ஆக உயர்ந்துள்ளது. ஆனால் அகில இந்திய சராசரியே 27%-தான். 2035-ஆம் ஆண்டிற்குள் 50% ஆக உயர வேண்டும் என்பதுதான் ஒன்றிய அரசின் இலக்கு” என்றார் அவர்.

வருகை தந்த மாணவர்களுக்கு நிகழ்ச்சியின் நிறைவில், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான ‘கலைஞரும் நானும்’ நூல் வழங்கப்பட்டது.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், மாவட்ட துணை அமைப்பாளர் வி.தினேஷ்குமார், பகுதி துணை அமைப்பாளர் செ. சதீஷ்குமார், ஆர். விக்னேஷ், எம்.பி.புருஷோத்தமன் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

## கழக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. பங்கேற்கிறார்!

# சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய தொகுதிகளின் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்.

| வ. எண் | சட்டமன்ற தொகுதி | நாள் (ம) நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | கொளத்தூர் | 10.6.2025 மதியம் 10:30 மணி | எஸ்.எஸ்.எலைட் ஹால், 70 அடி சாலை, ஜவஹர் நகர், சென்னை–82. |
| 2. | வில்லிவாக்கம் | 10.06.2025 காலை 11.15 மணி | டி.கே.ஏ.திருமண மண்டபம். எம்.டி.எச்.சாலை, வில்லிவாக்கம் |
| 3. | அம்பத்தூர் | 10.06.2025 காலை 12:00 மணி | ஸ்ரீரங்கா மஹால், விவேகானந்தா நகர் (செந்தில்நகர் சிக்னல் அருகில்), வார்டு 83அ, கொளத்தூர் |

மேற்கண்ட கலந்துரையாடல் கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்டதிற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு/பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் அவரவர் உள்ளடங்கிய சட்டமன்ற தொகுதியின் கலந்துரையாடல் கூட்டத்திற்கு தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவொற்றியூர் ஆர்.டி.மதன்குமார் ஆகியோர் முன்னிலையில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் அலமாதி ஊராட்சி பேருந்து நிறுத்தும் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படத்தினை திறந்து வைத்து பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கே.தமிழ்வாணன், மு.கீதாராமன், நா.பரசுராமன், பத்மநாபன், ப.ரவி, எம்.எஸ்.மணிகண்டன், ஆர்.சி.சிவசங்கரன், க.பாலாஜி, பிரேமா, அன்பு, ராஜசேகர், கலைவாணன், சந்திரன், முனுசாமி, பாஸ்கர், வேணு, ஜெயபால் கார்த்திக் ராஜா, ஜீவா, ஹரிஷ், விக்கி, லோகேஷ், கவின், பிரகாஷ், முகேஷ், சூர்யா, ஜெயபிரகாஷ், சாய், கவுதம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் ஏ.வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் பகுதி கழக அலுவலகத்தில் பகுதி துணைச் செயலாளர்கள் வி.ஜி.தினகரன், ஆர்.டி.ரமேஷ் குமார் ஆகியோரின் முன்னிலையில் பகுதி அவைத்தலைவர் வா. முத்துசாமி தலைமையில் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் எஸ்.மோகன் ஆலோசனை வழங்க வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இதில் வா. முத்துசாமி, சாலை டி.கணேசன், மு.செல்வம் த.ச.கரிகால சோழன், துர்கா கோதண்டம், எம்.எஸ். நாகலிங்கம் மற்றும் மாவட்டப் பகுதி அணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில்

# திருவொற்றியூர் மேற்குப் பகுதிக் கழகக் கூட்டம்!

## எஸ்.மோகன் சிறப்புரை!

*சென்னை, ஜூன் 10*

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன் முன்னிலையில் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், அணிகளின் அமைப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

ஓரணியில் தமிழகம் என்கிற முழக்கத்தை முன் வைத்து கழகப் பணியாற்ற சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அவருடைய வழிகாட்டுதலில் 8.6.2025 அன்று திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் எர்ணாவூர் ராமகிருஷ்ணா நகர் பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் எஸ். மோகன் முன்னிலையில் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் அணிகளின் அமைப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும், பாக முகவர்களின் பணிகள் குறித்தும், அணிகளின் நிர்வாகிகள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

தொடர்ந்து வட்ட கழகங்கள் வாரியாக ஆய்வுக் கூட்டங்கள் நடைபெறும் எனவும் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வில் தலைமை கழக வழக்கறிஞர் கவி கணேசன் எம்.சி., பகுதிக் கழக நிர்வாகிகள் இ.குமரவேல், திருமதி இந்துமதி, வஜ்ரவேல், வட்டக் கழக செயலாளர் எம்.சிவகுமார், டி.சேகர், கீ.கண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் குமார், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் மோகனசுந்தரம்,

மாவட்ட பிரதிநிதிகள் தினேஷ் குமார், எம்.ராம்குமார், எம்.சந்திரகுமார், பொன்.கோ.விஜயன், எஸ். கணேஷ், எஸ்.ஆர்.மலைராஜ், மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர்.நவக்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வைம.கண்ணதாசன், மகளிர் சமூக வலைத்தள ஒருங்கிணைப்பாளர் எஸ்.தாமரை, வட்ட அவைத்தலைவர் கே.பாலு மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள் திரளாக பங்கேற்றார்கள்.

## மண்டலக் குழுத் தலைவர் தி.மு. தனியரசு எம்.சி. ஏற்பாட்டில்

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## தொகுதிப் பொறுப்பாளர் எஸ்.மோகன் பங்கேற்பு!

*சென்னை, ஜூன் 10-*

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அவர்களின் ஆலோசனையின் படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அவர்களின் ஏற்பாட்டில் 8.6.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருவொற்றியூர் சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி துணை செயலாளர்கள் எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன் ஆகியோரின் முன்னிலையில் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் திருவொற்றி யூர் தொகுதி பொறுப்பாளர் எஸ். மோகன் அவர்களுடன் வட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் குறிஞ்சி எஸ். கணேசன், வீ.கவி கணேசன், டி.ஏ.ராஜி, இரா.முருகேசன், சாந்தி பக்தன், த. கார்த்திகேயன், எம்.எல்.சரவணன், டி.சி.வி.மணிகண்டன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ. சதிஸ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், எகா. கார்த்திகேயன், ஒய்.ரஜினி, நந்தி பி.எஸ்.சைலஸ், ம. ஜெயராமன், ஆர்.டில்லி, கே.கார்த்திகேயன், அ.அப்துல் சலிம், ம.எத்திராஜ், ப. சந்தானகிருஷ்னன் மற்றும் மாவட்ட பகுதி அணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

உறுப்பினர் சேர்த்தல் அனைத்து வட்டங்களில் பாக முகவர்கள் துணை பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!






பெருநகர சென்னை மாநகராட்சிப் பூங்காக்களுக்கு நெகிழிக் குப்பைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட இருக்கைகளை மேயர் ஆர். பிரியாவிடம் தமிழ்நாடு பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் நேற்று (09.06.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, தமிழ்நாடு பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் பாபு ஸ்ரீனிவாசன், பி.சுவாமிநாதன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் வார்டு 9, புதியதாக துவக்க உள்ள திருவொற்றியூர் மார்க்கெட் பணிகள் நிலை குறித்தும் வார்டு 7ல் பம்பிங் ஸ்டேஷன் குளம் சீர் அமைப்பு, கால்நடை பாராபரிப்பு மையம் மாணிக்கம் நகர் சுரங்கப் பாதை பணிகளை ஆய்வு மேற்கொண்டு விரைவில் முடிக்க வேண்டும் என்று தெரிவித்து கொண்டார். இதில் 1வது மண்டல குழு தலைவர் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு, மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டலம் 1 உதவி ஆணையர் சி.விஜய்பாபு, செயற்பொறியாளர் ஏ.பாபு, கே.பாண்டியன், மண்டல நல அலுவலர் லீனா, உதவி செயற்பொறியாளர் தனசேகர், இளநிலை பொறியாளர் மஞ்சுளா, மாமன்ற உறுப்பினர் எம்.எஸ்.திராவியம், வட்ட செயலாளர் எம்.எல்.சரவணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. இராதாமணி

**ஜூன் 10 (2019)**



கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, திருமணம் செய்யாமலேயே கழகப் பணியாற்றியவர்.

கலிஞ்சிக்குப்பம் கிளைக் கழகச் செயலாளராக, பின்னர் ஆறு முறை கண்டமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக – விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – விழுப்புரம் மத்திய மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

விழுப்புரம் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் – மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்
தி.மு.க.**